# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 114/2021 | Village | : | |
| Prosecution witness | : | PW- 26 | Taluk | : | |
| Name | : | திரு. சிவக்குமார் | Occupation | : | |
| Father Name | : | திரு. துரைபாண்டி | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 14.08.2025**

A1 produced. A2, A3 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது அறிவியல் அலுவலராக தடய அறிவியல் துறை சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.6.2020 அன்று அறிவியல் அலுவலராக வட்டார தடய அறிவியல் ஆய்வகம் தஞ்சாவூரில் பணியில் இருந்தபோது தலைமை காவலர் 1180 திரு. சண்முகசுந்தரம் என்பவர் மூலமாக சரியாக மூடி முத்திரையிடபட்ட தடய பொருட்களை நீதித்துறை நடுவர் திருவையாறு அவர்களிடமிருந்து பெறபட்டது. அதற்கான ஆய்வக எண் TAN/BIOL/90/2020 வழங்கபட்டது. மேற்கண்ட தடயபொருட்களை பிரித்து பார்க்கும்போது அவை பின்வருமாறு

1) 54 செமீ நீளமுள்ள துருபிடித்த வெட்டு அரிவாள் ஒன்று அதில் மரக்கைபிடி, மஞ்சள் நிற உலோகத்தால் ஆன வளையம் இருந்தது.

2) 62 செமீ நீளமுள்ள துருபிடித்த உலோகத்தால் ஆன கடப்பாறை ஒன்று

3) கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய சிறிய கற்கள் மற்றும் தாவர பொருட்கள் கலந்த மண்சிறிதளவு

4) சிறிய கற்கள் மற்றும் தாவர பொருட்கள் கலந்த மண் சிறிதளவு

5) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கிழிந்த காவி நிற வேட்டி ஒன்று அதில் மஞ்சள் நிற பாடர் போடபட்டிருந்தது

6) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கிழிந்த மற்றும் கசங்கிய மெருன் கலர் அண்டர்வையர் ஒன்று

7) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கிழிந்த மற்றும் கசங்கிய மற்றும் கருப்பு நிற முழுக்கை சட்டை அதில் நீல நிற குறுக்கு கோடு போடபட்டிருந்தது

8) முழுவதுமாக கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய 80 செமீ நீளமுள்ள துருபிடித்த உலோகத்தால் ஆன வளைந்த பைப்பு ஒன்று

மேற்கண்ட அயிட்டம் 1 முதல் 8 வரையிலான தடய்பொருட்களை இராசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்த பட்டதில் அவற்றில் அயிட்டம் 3 மற்றும் 5 முதல் 8 வரையிலான தடயபொருட்களில் இரத்தம் கண்டறியபட்டது. ஆனால் அயிட்டம் 1, 2 மற்றும் 4இல் இரத்தம் கரை கண்டறியபடவில்லை என்று சான்று வழங்கினேன்.

குறிப்பு- மேற்கண்ட இரத்த மாதிரிகளை இரத்தம் இனம் மற்றும் வகையை கண்டறியும் பொருட்டு துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் உயிரியல் பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.